# யா/கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலயம்

## பரிசளிப்பு விழா அறிக்கை - 2017

| | | |
|---|---|---|
| காலம் | - | 27.10.2017 வெள்ளிக்கிழமை |
| நேரம் | - | மு.ப 9.00 மணி |
| இடம் | - | பாடசாலை மண்டபம் |

தலைவர்
**திரு.அ.ஆனந்தராசா**
*(பாடசாலை முதல்வர்)*

பிரதம விருந்தினர்
**திருமதி.சுபாஜினி மதியழகன்**
*(பிரதேச செயலர், பிரதேச செயலகம், வலிகாமம் கிழக்கு)*

சிறப்பு விருந்தினர்
**திரு.அ.அகிலதாஸ்**
*(பிரதிக் கல்விப் பணிப்பாளர், யாழ் கல்வி வலயம்)*

கௌரவ விருந்தினர்கள்
**திரு நா. சிவநேசன்**
*(கோட்டக்கல்விப் பணிப்பாளர் கோப்பாய்க் கல்விக் கோட்டம்)*

**திரு.சோ.சுஜீவகுமார்**
*(பழைய மாணவர், சமுர்த்தி முகாமையாளர் பிரதேச செயலகம், தென்மராட்சி)*

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்!!**

# நிகழ்ச்சி நிரல்

01. விருந்தினர்களை அழைத்துவரல்
02. மங்கல விளக்கேற்றல்
03. இறைவணக்கம்
04. தமிழ்த்தாய் வாழ்த்து
05. வரவேற்பு நடனம்
06. வரவேற்புரை
07. ஆசியுரை
08. அதிபர் அறிக்கை
09. தமிழ்ப்பேச்சு
10. ஆங்கிலப்பேச்சு
11. கௌரவ விருந்தினர்கள் உரை
12. சிறப்பு விருந்தினர் உரை
13. பிரதம விருந்தினர் உரை
14. பரிசில் வழங்கல்
15. நன்றியுரை
16. கலைநிகழ்ச்சிகள்
17. பாடசாலைக்கீதம்

# அதிபர் அறிக்கை - 2017

எல்லாம் வல்ல சித்திரவேலாயுத சுவாமிகளின் இறையருளை முதற்கண் மனதில் நிறுத்தி 2017 ஆம் ஆண்டுக்கான அதிபர் அறிக்கையை உங்கள் முன் சமர்ப்பிப்பதில் பெருமகிழ்வடைகின்றேன்.

**"உயர்வு உள்ளல்"** என்னும் மகுட வாசகத்தைத் தன்னகத்தே கொண்டு கோப்பாய் வடக்கிலிருந்து கல்விப்பணியாற்றி வரும் எமது பாடசாலை 2017 ஆம் ஆண்டிற்கான பரிசில் நாளை இன்றைய தினம் கொண்டாடுகிறது.

இன்றைய பரிசளிப்பு விழாவிற்கு ஆசியுரை வழங்க வருகை தந்துள்ள சிவாச்சாரியார் அவர்களே!

இன்றைய பரிசுநாளைச் சிறப்பிக்கவென வருகை தந்திருக்கும் பிரதம விருந்தினர் அவர்களே, சிறப்பு விருந்தினர் அவர்களே, கௌரவ விருந்தினர்களே, அயற்பாடசாலை அதிபர்களே, பெற்றோர்களே, பழைய மாணவர்களே, பாடசாலை ஆசிரியர்களே, என் பாசத்திற்குரிய மாணவச் செல்வங்களே உங்கள் அனைவருக்கும் எனது அன்பு கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

இன்றைய பரிசளிப்பு விழாவுக்கு பிரதம விருந்தினராக வருகை தந்து விழாவைச் சிறப்பித்துக் கொண்டிருக்கும் எமது மதிப்பிற்குரிய கோப்பாய் பிரதேச செயலாளர் திருமதி.சுபாஜினி மதியழகன் தனது ஆரம்பக் கல்வியினை தெல்லிப்பளை வீமன்காமம் மகா வித்தியாலயத்திலும் உயர் கல்வியினை தெல்லிப்பளை யூனியன் கல்லூரியிலும் கற்று யாழ்ப்பாண பல்கலைக்கழக கலைப்பீடத்துக்கு தெரிவானார். பாடசாலையில் படிக்கும் காலத்தில் கலைநிகழ்வு மற்றும் விளையாட்டிலும் தன்னை முழுமையாக அர்ப்பணித்தவர்.

தனது பல்கலைக்கழக கல்வியினை நிறைவு செய்து 2003 ஆம் அண்டு நடைபெற்ற இலங்கை நிர்வாக சேவையின் போட்டிப்பரீட்சையில் சித்தி பெற்று முல்லைத்தீவு மாவட்டத்தில் அமைந்துள்ள ஒட்டிசுட்டான் பிரதேச செயலகத்தின் பிரதேச செயலாளராகப் பொறுப்பேற்றுக் கொண்டார். ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் பொதுநிர்வாக முதுமாணிப்பட்டத்தினைப் பெற்றுக்கொண்டதுடன் 2011 ஆம் ஆண்டு பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சினால் நடாத்தப்பட்ட பிரதேச செயலகங்களுக்கிடையிலான முகாமைத்துவப் போட்டியில் பிரதேச செயலகம் தேசிய மட்டத்தில் வெற்றி பெறுவதற்கு இவரது தலைமைத்துவமே காரணமாகும். இக்காலத்தில் ஏற்பட்ட சுனாமி, வெள்ள அனர்த்தம் காரணமாக ஏற்பட்ட இழப்பினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான புனரமைப்பு பணிகளில் தன்னை ஈடுபடுத்தி பிரதேசத்தினைக் கட்டியெழுப்பும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வரும் வேளையில் ஏற்பட்ட போர் மற்றும் இடப்பெயர்வு காரணமாக மக்களோடு மக்களாக இரவோடு இரவாக வவுனியா வெங்கலச்செட்டிக்குளம் பிரதேச செயலகத்தின் உதவிப்பிரதேச செயலாளராகவும் அப்பிரிவில் அமைக்கப்பட்ட நலன்புரி நிலையத்தின் பொறுப்பதிகாரியாகவும் நியமிக்கப்பட்டு தனது கடமையினை மேற்கொண்டார். 2008 ஆம் அண்டு மீண்டும் அழிவடைந்து பாதிக்கப்பட்ட

மக்களின் மீள்குடியேற்ற நடவடிக்கையினை மேற்கொள்வதற்காக ஒட்டிசுட்டான் பிரதேச செயலாளராக கடமையினை ஏற்றுக்கொண்டார். 2011 ஆம் ஆண்டு யாழ்ப்பாண மாவட்டத்தின் கரவெட்டி பிரதேச செயலகத்தின் உதவிப்பிரதேச செயலாளராக பணியாற்றும் காலத்தில் அரச ஊழியர்களுக்கிடையிலான தேசிய மட்ட சிறுகதைப் போட்டியில் முதலாம் இடத்தினை பெற்றுக் கொண்டதுடன் பல்வேறு மட்ட கிராம அமைப்புக்களை உருவாக்கினார். 2012 ஆம் ஆண்டு நல்லூர் பிரதேச செயலகத்துக்கு உதவிப்பிரதேச செயலாளராக பொறுப்பேற்றுக் கொண்டதுடன் சர்வதேச மகளிர் தின நிகழ்வினை சிறப்பாக நடாத்தி பெண்கள் மத்தியில் விழிப்புணர்வினை ஏற்படுத்தியவராவார். இவரது அர்ப்பணிப்பு மிக்க பொதுச்சேவையாலும் பிரதேசத்தில் மேற்கொண்ட அபிவிருத்தி நடவடிக்கையாலும் தனது அரச பணிவாழ்வில் முன்னேற்றம் கண்டு கோப்பாய் பிரதேச செயலகத்தின் பிரதேச செயலாளராக 2016 ஆம் ஆண்டு பொறுப்பேற்று கடமையாற்றி வருகிறார். இலங்கையின் SLIDA நிறுவனத்தில் பல்வேறு பயிற்சிகளை பெற்றது மட்டுமன்றி யப்பான், அவுஸ்ரேலியா போன்ற நாடுகளில் நடைபெற்ற பல்வேறு பயிற்சிகளிலும் கலந்து கொண்டமை இங்கு குறிப்பிடத்தக்கது. இவரது துடிப்பான செயற்பாடுகளால் எமது வலிகாமம் கிழக்கு பிரதேசம் என்றும் வளமும் மகிழ்வான வாழ்வும் பெற்று வாழும் காலம் கிடைக்கப்பெற்றுள்ளது என்றே சொல்லலாம். எமது வளர்ச்சி பெற்று வரும் பாடசாலையும் இவரது நிர்வாகப் பிரிவுக்குள்ளே இருப்பது எமக்குப் பெருமையளிக்கிறது. இச்சிறப்பு மிக்க பிரதேச செயலாளர் எமது பரிசளிப்பு விழாவுக்கு பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பிப்பது எமது பாடசாலைக்குக் கிடைத்த உயர்ந்த கௌரவமாகக் கருதுகின்றோம்.

இன்றைய பரிசளிப்பு நாளில் சிறப்பு விருந்தினராகக் கலந்து சிறப்பித்துக் கொண்டிருக்கும் பிரதிக்கல்விப்பணிப்பாளர் திரு.அ.அகிலதாஸ் அவர்கள், ஒட்டுவெளி மிருசுவிலைப் பிறப்பிடமாகக் கொண்டவர். தனது ஆரம்பக்கல்வியை யா/ஒட்டுவெளி அ.மி.த.க பாடசாலையில் கற்றார். இடைநிலைக்கல்வியை யா/உசன் இராமநாதன் மகா வித்தியாலயத்தில் கற்று தனது கலைமாணிப் பட்டத்தை யாழ் பல்கலைக்கழகத்தில் நிறைவு செய்தார். பட்டப்பின் கல்வி டிப்புளோமாவையும், கல்வி முதுமாணிக்கற்கை நெறியையும் யாழ் பல்கலைக்கழகத்தில் நிறைவு செய்தார்.

களஞ்சியப் பொறுப்பாளராக தனது அரசசேவையை 1977 இல் ஆரம்பித்து 1984 வரை மேற்கொண்டார். பின் 1984 இல் பு/கற்பிட்டி அல்அல்கா முஸ்லீம் மகா வித்தியாலயத்தில் ஆசிரியராக நியமனம் பெற்றார். பின் பு/கற்பிட்டி கரைத்தீவு மகாவித்தியாலயத்தில் சிறிது காலம் கடமையாற்றிய பின் 1989 இல் தான் இடைநிலைக் கல்வி கற்ற யா/உசன் இராமநாதன் மகா வித்தியாலயத்திற்கு இடமாற்றம் பெற்றுச் சேவையாற்றி வரும் போது 1991 இல் இலங்கை அதிபர் சேவை தரம் II போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்து அப்பாடசாலையிலேயே 1994

வரை உபஅதிபராக இருந்து பின் யா/கச்சாய் அ.த.க பாடசாலையில் 2000 ஆம் ஆண்டு ஆரம்பம் வரை அதிபராகக் கடமையாற்றினார்.

06.06.1996 இல் சேவைமூப்பு மூலம் இலங்கை அதிபர் சேவை தரம் I க்கு பதவியுயர்வு பெற்று 2000 ஆம் ஆண்டிலிருந்து 2006 ஆம் ஆண்டு வரை யா/கோப்பாய் மகா வித்தியாலயத்தில் அதிபராகவும் தொடர்ந்து 2007 ஆம் ஆண்டு வரை யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியில் அதிபராகவும் கடமையாற்றி 2007ஆம் ஆண்டு, நான் ஆசிரியராகக் கடமையாற்றிக் கொண்டிருந்த யா/கொக்குவில் இந்துக்கல்லூரிக்கு அதிபராக நியமிக்கப்பட்டார். 2012 ஆம் ஆண்டு வரை இப்பாடசாலையில் அதிபராகக் கடமையாற்றினார். தான் ஆசிரியராக, அதிபராக இருந்த பாடசாலைகளின் வளர்ச்சிக்கு தன்னாலான அர்ப்பணிப்பு மிக்க சேவையை வழங்கினார். குறிப்பாக கொக்குவில் இந்துக்கல்லூரி இவரது சேவைக்காலத்தில் பௌதிகவள ரீதியாகவும், கற்றல் பெறுபேறுகள் தொடர்பாகவும் அபரிதமான வளர்ச்சி கண்டது. இவர் இக்கல்லூரியில் அதிபராகப் பணியாற்றிக் கொண்டிருந்த போது 2011 இல் இலங்கை கல்வி நிர்வாக சேவை தரம் III இற்கு சேவை மூப்பு, திறமை மூலம் பதவியுயர்வு பெற்று 2012 ஆம் ஆண்டு தென்மராட்சி கல்வி வலயத்தில் பிரதிக்கல்விப் பணிப்பாளராகப் பதவிஉயர்வு பெற்றார். பின் தீவக கல்வி வலயத்துக்கு இடமாற்றம் பெற்று சேவையாற்றி, 2014 ஆம் ஆண்டு தொடக்கம் 2016 ஆம் ஆண்டு வரை நல்லூர் கோட்டக்கல்விப் பணிப்பாளராகப் பதவிவகித்து, 2016 ஆம் ஆண்டு தொடக்கம் இன்று வரை யாழ் கல்வி வலயத்தில் முகாமைத்துவப் பிரதிக்கல்விப் பணிப்பாளராக் கடமையாற்றி வருகின்றார். எங்கள் பாடசாலையின் முன்னேற்றங்களை வாழ்த்தியும், தன்னாலான ஆலோசனைகளையும், உதவிகளையும் வழங்கி வருகின்றார். இவ்வாறான நல்லுள்ளம் கொண்டவர் எமது பரிசளிப்பு விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்து சிறப்பிப்பது எமது பாடசாலைக்கு பெருமையளிக்கிறது.

இன்றைய பரிசில் நாளில் கௌரவ விருந்தினர்களில் ஒருவராகக் கலந்து சிறப்பித்துக் கொண்டிருக்கும் திரு.நா.சிவநேசன் அவர்கள் கொக்குவிலைப் பிறப்பிடமாகக் கொண்டவர். தனது ஆரம்ப, இடைநிலைக்கல்வியை யா/கொக்குவில் இந்துக் கல்லூரியில் பூர்த்தி செய்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கலைப்பட்டத்தினையும் தேசிய கல்வி நிறுவனத்தில் பட்டப்பின் கல்வி டிப்புளோமாவையும் (PGDE) யாழ் பல்கலைக்கழகத்தில் கல்விமுதுமாணிப் பட்டத்தையும் (M.Ed) பெற்றுக் கொண்டவர்.

1990 ஆம் ஆண்டிலிருந்து தனது ஆசிரியர் சேவையை ஆரம்பித்து வலிகாமம் வலயத்தில் பல பாடசாலைகளில் திறம்பட ஆற்றி வந்தார். 1998 ஆம் ஆண்டு இலங்கை அதிபர் சேவை தரம் III க்கு உள்வாங்கப்பட்டு மானிப்பாய் புதுமடம் றோ.த.க பாடசாலையில் தனது அதிபர் சேவையை ஆரம்பித்தார. பின் யா / மயிலிணி சைவ மகா வித்தியாலயத்தில் தனது அதிபர் சேவையைத் தொடர்ந்தார். பின் யா / தாவடி இ.த.க பாடசாலையின் அதிபராகக்

கடமையைப் பொறுப்பேற்று அப்பாடசாலையின் முன்னேற்றத்துக்காக அயராது உழைத்தார். 2005 இல் அதிபர் சேவை தரம் II இற்கு உள்வாங்கப்பட்டும், 05.04.2011 இல் இலங்கை அதிபர் சேவை தரம் I இற்கும் உள்வாங்கப்பட்டார். தொடர்ந்து யா / இணுவில் மத்திய கல்லூரியிலும், யா / கோண்டாவில் இந்துக் கல்லூரியிலும் அதிபராகத் தனது சேவையைத் தொடர்ந்தார். 08.06.2016 தொடக்கம் கோப்பாய் கல்விக் கோட்டப்பணிப்பாளராகப் பதவியுயர்வு பெற்று சேவையாற்றி வருகின்றார். இவர் கோப்பாய்க் கல்விக் கோட்டத்தின் வளர்ச்சிக்குத் தன்னை அர்ப்பணித்து சேவையாற்றி வருகிறார். அண்மையில் வெளியாகிய தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சையில் கோப்பாய் கல்விக்கோட்டம் சென்ற ஆண்டுடன் ஒப்பிடும் போது 30 மாணவர்கள் அதிகமாகச் சித்தியடைந்து சாதனை படைத்துள்ளது. இச்சாதனை இவரது அயராத உழைப்புக்குக் கிடைத்த வெகுமதியாகும். எங்கள் பாடசாலை வளர்ச்சியில் அதீத அக்கறை கொண்ட இவர் இப்பரிசில் நாளில் கௌரவ விருந்தினராகக் கலந்து சிறப்பிப்பது எமது பாடசாலைக்குப் பெருமையாகும்.

இன்றைய பரிசில் நாளில் கௌரவ விருந்தினர்களில் ஒருவராகக் கலந்து சிறப்பித்துக் கொண்டிருக்கும் திரு. சோமசுந்தரஐயர் சுஜீவகுமார் அவர்கள் ஆரம்பக் கல்வியை 1982 ஆம் ஆண்டு கொழும்பு பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரியில் ஆரம்பித்து தொடர்ந்து எமது பாடசாலையில் ஆரம்பப்பிரிவில் கல்வியைத் தொடர்ந்து 1991 டிசெம்பரில் க.பொ.த (சா/த) பரீட்சையில் உயர்ந்த பெறுபேறுகளைப் பெற்று யா/ இந்துக்கல்லூரியில் உயர்தர வகுப்பில் வர்த்தகத் துறையைத் தெரிவு செய்து யாழ் பல்கலைக்கழகத்திற்கு முகாமைத்துவத் துறைக்குத் தெரிவு செய்யப்பட்டு முகாமைத்துவப் பட்டதாரியானார். குருத்துவக்கல்வியையும் கற்றுச் சிறப்பு பெற்று விளங்கும் இவர் 2005 ஆம் ஆண்டு பட்டதாரி நியமனத்தினூடாக உடுவில் பிரதேச செயலகத்தில் சமுர்த்தி முகாமையாளராக நியமனம் பெற்றார். 2009 ஆம் ஆண்டு நல்லூர் பிரதேச செயலகத்தில் பணிபுரிந்து தற்போது தென்மராட்சிப் பிரதேச செயலகத்தின் கீழுள்ள கைதடி சமுர்த்தி வங்கி முகாமையாளராக கடமையாற்றுகின்றார். இவரது துணைவியார் எமது பாடசாலையில் ஆங்கில ஆசிரியராகக் கடமையாற்றுகின்றார். இவர்களின் இரு மக்கட் செல்வங்களில் புதல்வன் யா/ இந்துக் கல்லூரியில் தரம் 07 இலும், புதல்வி யா/ இந்து ஆரம்பப் பாடசாலையில் தரம் 02 இலும் கல்வி கற்று வருகிறார்கள். இவர் மும்மொழிப்புலமையுள்ளவர். எமது பாடசாலையில் கல்வி கற்று உயர் பதவியில் இருக்கும் இவர் இன்றைய பரிசுநாளில் கௌரவ விருந்தினராகக் கலந்து சிறப்பிப்பது எமது பாடசாலைக்குக் கிடைக்கும் கௌரவமாகும்.

## எமது பாடசாலையின் வரலாற்றுப் பாதை

யா/கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலயத்திற்கான அடிக்கல் 1926 ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் 26ஆம் திகதி விஜயதசமி அன்று சைவ வித்தியா விருத்திச் சங்கத் தலைவர் திரு.சு.இராசரத்தினம் அவர்களினால் ஸ்தாபிக்கப்பட்டது. இப்பாடசாலை திரு.மு.நாகலிங்கம் உபாத்தியாருடைய இல்லத்தில் அமைக்கப்பட்ட 1000 சதுரஅடி கொட்டகையில் இயங்கி வந்தது. ஆரம்பத்தில் திரு.வேதராணியக்குருக்கள் அதிபராகவும் இவரோடு இரண்டு ஆசிரியர்களும் பணியாற்றினார். இப்பாடசாலைக்கு மயிலியோடை முருகர் கந்தர், சின்னத்தம்பி மார்க்கண்டு, அவரது சகோதரர் பொன்னையா, திரு நாகலிங்கம் அம்பலவாணர், சின்னக்குட்டி கதிரவேலு ஆகியோர் காணியை நன்கொடையாக வழங்கினர். சைவவித்தியாவிருத்திச் சங்கம் ஆசிரியர்களையும், தளபாடங்களையும் இப்பாடசாலைக்கு வழங்கி உதவியது. ஆரம்பத்தில் தரம் 08 வரை (JSC) இருந்த பாடசாலை பின்னர் தரம் 11 வரை (SSC) வகுப்புக்கள் நடைபெற்றன. பாடசாலையின் வளர்ச்சி காரணமாக 1932 இல் உதவி நன்கொடை பெறும் பாடசாலையாக அங்கீகாரம் பெற்றது.

இப்பாடசாலை இதுவரை 18 அதிபர்களின் வழிகாட்டலில் வளர்ச்சி கண்டு வருகிறது. தற்போது தரம் 01 தொடக்கம் தரம் 11 வரையான வகுப்புகளுடனும் சிறந்த ஆசான்களின் வழிநடத்தலில் சிறப்பாக வளர்ச்சி பெற்று வருகிறது. அவ்வளர்ச்சியின் உச்சகட்டமாக 2014 ஆம் ஆண்டு க.பொ.த (சா/த) பரீட்சையில் 94 சதவீத உயர்சித்தியைப் பெற்று சாதனை நிலைநாட்டி, அவ்வாண்டு மாகாணமட்டத்தில் இரண்டாவது இடத்தைப் பிடித்து கல்வியதிகாரிகளின் கவனத்தை ஈர்த்ததன் காரணமாக $110^1$ x $25^1$ அளவு கொண்ட அலுவலகம், விஞ்ஞானஆய்வுகூடம், கணினிஅறை போன்றன கீழும், மேற்தளத்தில் 05 வகுப்பறைகளையும் கொண்ட மாடிக்கட்டடத்துடனும் நூலகம், விளையாட்டு மைதானம் என்பவற்றைக் கொண்டு, தற்போது எனது தலைமையில் இப்பாடசாலை சிறப்பாக இயங்கி வருகிறது.

20 ஆசிரியர்களையும், மூன்று கல்விசாரா ஊழியர்களையும், 225 மாணவர்களையும் தாங்கி இப்பாடசாலை கல்விப் பணியில் வீறுநடை போட்டு வருகிறது. புலமைப்பரிசில் பரீட்சை, கல்விப் பொதுத் தராதர (சா.த) பரீட்சை பெறுபெறுகளிலும் இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் முன்னணிப் பாடசாலையாக திகழ்ந்து வருகிறது. ***“உயர்வு உள்ளல்”*** என்ற மகுட வாசகத்தை தாங்கி சரவணபவனின் அருட்கடாட்சத்தைப் பெற்று வளர்ச்சிப் பாதையை நோக்கிச் செல்கிறது.

## மாணவர் தொகை

| தரம் | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஆண் | 05 | 11 | 17 | 12 | 09 | 17 | 13 | 09 | 09 | 13 | 12 | 127 |
| பெண் | 08 | 11 | 06 | 07 | 05 | 09 | 12 | 05 | 08 | 15 | 12 | 98 |
| மொத்தம் | 13 | 22 | 23 | 19 | 14 | 26 | 25 | 14 | 17 | 28 | 24 | 225 |

## கல்விச் செயற்பாடுகள்

பாடசாலையின் வளர்ச்சியை அறிந்து கொள்வதற்கு அடிப்படையாக அமைவது கல்வி அடைவுகளாகும். கல்வி மாணவர்களின் அறிவாற்றலை விருத்தி செய்வதற்கும் விழுமியப் பண்புகளை வளர்ப்பதற்கும் நற்பிரசையாக வாழ்வதற்கும் பெரிதும் துணைபுரிகிறது.

பாடசாலையின் கல்விச் செயற்பாட்டை அளவிடுவதற்கான சிறந்த அளவுகோல் பொதுப்பரீட்சை முடிவுகளாகும். அந்தவகையில் எமது பாடசாலைச் செயற்பாட்டினை அளவிடுவதற்கு இரண்டு பொதுப்பரீட்சைகளான தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சை, க.பொ.த சாதாரண தரப் பரீட்சைகள் உள்ளன. தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சையில் இந்த ஆண்டில் 14 மாணவர்கள் தோற்றி அவர்களில் ஐந்து மாணவர்கள் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்றுள்ளனர். மேலும் 12 மாணவர்கள் 70 புள்ளிகளுக்கு மேல் பெற்று பாடசாலைக்குப் பெருமை சேர்த்துள்ளனர். மாணவர்களின் வெற்றிக்கு வழிகாட்டிய தரம் 05 வகுப்பாசிரியர் மற்றும் ஆரம்பப்பிரிவு ஆசிரியர்களையும் இந்நாளில் பாராட்டுகிறேன்.

கடந்த 5 வருடங்களில் தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றி சித்தியடைந்த மாணவர்களையும், 70, 100 புள்ளிகளிற்கு மேல் பெற்றுக் கொண்டோரின் வீதாசாரத்தையும் பின்வரும் அட்டவணை காட்டுகின்றது.

| ஆண்டு | தோற்றி -யோர் | சித்தியடை -ந்தோர் | 70 புள்ளிகளுக்கு மேல் பெற்றோர் | 70 புள்ளிகளுக்கு மேல் பெற்றோர் வீதம் | 100 புள்ளிகளுக்கு மேல் பெற்றோர் | வீதம் |
|---|---|---|---|---|---|---|
| 2013 | 13 | 02 | 13 | 100% | 11 | 85% |
| 2014 | 13 | 01 | 12 | 92% | 07 | 54% |
| 2015 | 20 | 04 | 18 | 90% | 12 | 60% |
| 2016 | 23 | 03 | 20 | 87% | 14 | 61% |
| 2017 | 14 | 00 | 12 | 86% | 05 | 33% |

2016 டிசெம்பரில் நடைபெற்ற க.பொ.த (சா.த) பரீட்சை முடிவுகளின்படி பரீட்சைக்குத் தோற்றியோரில் க.பொ.த உயர்தரம் கற்பதற்கான சகல தேவைப்பாடுகளையும் பூர்த்தி செய்து 81 சதவீதமான மாணவர்கள் சித்தியடைந்து கோப்பாய்க் கல்விக் கோட்டத்தில் சித்திவீதம் கூடிய முதலாவது பாடசாலையாக நாம் சாதனை படைத்துள்ளோம். இம்மாணவர்களை வழிப்படுத்திய ஆசிரியர்களையும் இந்நாளில் பாராட்டுகின்றேன். கடந்த 5 வருடங்களில் க.பொ.த சாதாரணப் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர் விபரமும் சித்தி வீதத்தையும் அட்டவணை காட்டுகிறது.

| ஆண்டு | தோற்றியோர் | சித்தியடைந்தோர் | சித்தி வீதம் |
|---|---|---|---|
| 2012 | 16 | 08 | 50% |
| 2013 | 16 | 07 | 44% |
| 2014 | 16 | 15 | 94% |
| 2015 | 14 | 08 | 57% |
| 2016 | 21 | 17 | 81% |

## க.பொ.த (சா/த) பெறுபேறு (2012 - 2016)

| பாடங்கள் | சித்தியடைந்த வீதம் | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 2012 | | 2013 | | 2014 | | 2015 | | 2016 | |
| | தோற்றி யோர் | சித்தி வீதம் | தோற்றி யோர் | சித்தி வீதம் | தோற்றி யோர் | சித்தி வீதம் | தோற்றி யோர் | சித்தி வீதம் | தோற்றி யோர் | சித்தி வீதம் |
| SAIVAISM | 17 | 100% | 14 | 100% | 15 | 100% | 14 | 100% | 21 | 100% |
| R.C | - | - | 03 | 100% | 1 | 100% | - | - | - | - |
| NON R.C | - | - | - | - | - | - | - | - | - | - |
| TAMIL LANG.LIT | 17 | 76% | 12 | 75% | 16 | 100% | 14 | 100% | 21 | 90% |
| ENGLISH | 17 | 29% | 06 | 38% | 16 | 50% | 14 | 21% | 21 | 38% |
| SCIENCE | 17 | 53% | 11 | 69% | 16 | 88% | 14 | 64% | 21 | 95% |
| MATHS | 17 | 59% | 11 | 69% | 16 | 94% | 14 | 78% | 21 | 86% |
| HISTORY | 17 | 65% | 13 | 81% | 16 | 100% | 14 | 78% | 21 | 90% |
| ART | 04 | 25% | - | - | 5 | 100% | 01 | 100% | 03 | 100% |
| MUSIC | 11 | 64% | 05 | 100% | 4 | 100% | 06 | 100% | 09 | 100% |
| DANCE | 01 | 100% | 02 | 100% | 2 | 100% | 03 | 100% | 03 | 100% |
| TAMIL.LIT | 01 | 00% | 02 | 29% | 5 | 60% | 04 | 25% | 06 | 100% |
| CIVICS | 10 | 60% | 07 | 70% | 11 | 100% | 09 | 89% | 10 | 90% |
| COMM.&ACC | 07 | 86% | 04 | 80% | 5 | 100% | 05 | 80% | 11 | 91% |
| AGRICUTURE | 01 | 100% | 04 | 80% | - | - | 01 | 100% | 05 | 100% |
| HOME SCIENCE | 02 | 100% | - | - | - | - | - | - | - | - |
| ICT | 04 | 100% | 02 | 100% | 5 | 100% | 07 | 100% | 06 | 83% |
| HYG.PHY.ED | 10 | 100% | 08 | 89% | 11 | 100% | 06 | 67% | 10 | 100% |

## முகாமைத்துவக்குழு

பாடசாலையின் வெற்றிகரமான செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்வதற்கு முகாமைத்துவக்குழுவின் பங்கும், பணியும் பிரதான காரணிகளாக அமைகின்றன. அந்தவகையில் பிரதிஅதிபர் திருமதி.ம.தனவீரசிங்கம் அவர்களும் சிரேஷ்ட ஆசிரியர்களான திருமதி.வி.கிருஸ்ணகுமார், திருமதி.தெ.கணேசலிங்கம், திரு.கா.திருப்பதி திருமதி.சி.பாலசுப்பிரமணியம், திருமதி.ஜெ.கேதீஸ்வரன், திரு.சு.கமலதாசன், திருமதி.ஜீ.மகேந்திரன், திரு.சா.கமலமூர்த்தி, திருச.உ.தயணன், திருமதி.ஸ்ரீ.சுஜீவகுமார், திரு.ப.மயூரதன், திருமதி.ஜெ.சிறில்தனராஜன் ஆகியோர் என்னுடன் இணைந்து முகாமைத்துவக் குழுவில் உறுப்பினராக இருந்து பாடசாலையின் துரித வளர்ச்சிக்குப் பக்கபலமாகச் செயற்பட்டு வருகிறார்கள்.

## ஒழுக்காற்றுக்குழு

மாணவர்களின் ஒழுக்க நெறிகளை விருத்தி செய்வதில் ஒழுக்காற்றுக்குழு முக்கிய பங்கு வகிக்கிறது. பிரதிஅதிபர் திருமதி.ம.தனவீரசிங்கம் தலைமையிலான குழு செயற்பாடுகளை முன்னெடுத்து வருகிறது. அந்தவகையில் திரு.சு.கமலதாசன், திரு.ப.மயூரதன், திருமதி.ஜெ.கேதீஸ்வரன், திரு.சா.கமலமூர்த்தி, திருமதி.சி.பாலசுப்பிரமணியம், திருமதி.வி.கிருஷ்ணகுமார் ஆகியோர் மாணவர் ஒழுங்குகளைக் கண்காணித்து வருகின்றனர். அவர்களையும் இந்நாளில் பாராட்டுவதில் பெரு மகிழ்வடைகிறேன்.

## மாணவர் முதல்வர்குழு

தலைமைத்துவப் பண்பினை பாடசாலையில் வழக்கும் நோக்கில் மாணவர் முதல்வர் குழு இயங்கி வருகிறது. இதற்குப் பொறுப்பாசிரியராக திரு.சு.கமலதாசன் ஆசிரியர் செயற்பட்டு வருகிறார். வருடந்தோறும் மாணவர் முதல்வர்கள் தெரிவு செய்யப்பட்டு சின்னம் சூட்டும் வைபவம் நடைபெற்று வருகிறது. இவ்வாண்டில் சிரேஸ்ட மாணவர் தலைவர்களாக செல்வன்.த.குருபரன், செல்வி.த.கஜபாலினி ஆகியோர் செயற்பட்டு வருகின்றனர். இவர்களையும் இந்நாளில் பாராட்டுகின்றேன்.

## விளையாட்டுத்துறை

கற்றல் கற்பித்தல் செயற்பாட்டில் விளையாட்டுத்துறை முக்கிய பங்கு வகிக்கின்றது. எமது பாடசாலையின் இல்லமெய்வல்லுநர் போட்டி 03.02.2017 வெள்ளிக்கிழமை சிறப்பாக நடைபெற்றது. பிரதமவிருந்தினராக வடமாகாண சபை உறுப்பினர் கௌரவ பா.கஜதீபன் அவர்கள் கலந்து சிறப்பித்தார். எமது மாணவர்கள் விளையாட்டுத்துறையில் வலய, மாகாண மட்டங்களில் எதிர்காலத்தில் சாதனை படைக்க பொறுப்பானவர்கள் கவனஞ் செலுத்த வேண்டும் எனவும் கேட்டுக்கொள்கின்றேன்.

## அண்மிய பாடசாலை சிறந்த பாடசாலைச் செயற்றிட்டம்

கல்வியமைச்சு தற்போது நடைமுறைப்படுத்தி வரும் இச்செயற்றிட்டத்தின் கீழ் மாணவர்களுக்கு அருகிலுள்ள பாடசாலைகளை சிறந்த பாடசாலையாக மாற்றி மாணவர் அனுமதிகளை அயலிலுள்ள பாடசாலைகளில் அதிகரிக்கச் செய்யும் இச்செயற்றிடத்தின் கீழ் எமது பாடசாலைக்கும் ரூபா 696000/= ஒதுக்கீடு செய்யப்பட்டு மலசலகூட நீர்விநியோக வசதிகள், நவீனமயப்படுத்தப்படும் வேலைகள் செய்து முடிக்கப்பட்டுள்ளன.

## உலக உணவுத் திட்டம்

மேற்படி செயற்திட்டத்தின் கீழ் எமது பாடசாலையில் தரம் 01 தொடக்கம் தரம் 09 வரையான மாணவர்களுக்கான ஒதுக்கீட்டிலிருந்து இருந்து அனைத்து மாணவர்களிற்கும் பெற்றோரின் உதவியுடன் உணவினை வழங்கி வருகின்றோம். இதனை வழங்குவதற்கு பெற்றோர்கள் வழங்கும் ஒத்துழைப்பும் அவர்களது பங்களிப்பும் பாராட்டுதற்குரியது. மாணவர்களின் உணவில் தினமும் இலைக்கறிகளை உள்ளடக்குவதற்கு செல்வன் பூ.யோகராசா தலைமையில் ஒரு திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது. தினமும் பெயர் குறிக்கப்பட்ட மாணவர்கள் தங்கள் வீட்டிலிருந்து இலைக்கறிகள் கொண்டு வந்து கொடுக்கிறார்கள். அவர்களுடைய பெயர் பதிவேட்டில் பதிவு செய்யப்படுகிறது. யாழ் மாவட்ட செயலக உலக உணவு திட்ட அதிகாரி இத்திட்டத்தை பார்வையிட்டு பதிவேட்டில் சிறப்பித்து எழுதியுள்ளமை இதற்கு சான்று. உலக உணவு செயற்திட்டத்திற்குப் பொறுப்பாசிரியராக திரு.சா.கமலமூர்த்தி ஆசிரியர் செயற்பட்டு வருகின்றார். இவரையும் இத்திட்டத்தின் கீழ் சமையற் தொண்டர்களாகப் பணிபுரிபவர்களையும் இந்நாளில் பாராட்டுவதில் பெருமகிழ்வடைகின்றேன். எமது மாணவர்களுக்கு உணவு வழங்கும் உலக உணவுத்திட்டத்தின் செயற்பாட்டினை மெச்சுகின்றேன்.

## சமூக இசைவுக்கான கல்வி நிகழ்ச்சித்திட்டம் (ESC)

## மாணவர் பாராளுமன்ற வேலைத்திட்டம்

மாணவர்களுக்கு எதிர்காலப் பிரஜை என்ற வகையில் மனித சமூகத்தில் பல்வேறு செயற்பாடுகளுக்கு இசைவடையத்தக்க தேர்ச்சியை கல்வி ஊடாகவே வழங்குதல் வேண்டும். ஆட்சி ஒழுங்கமைப்பில் காணப்படும் பல்வேறு வேறுபாடுகள் தொடர்பான விளக்கத்தையும் அனுபவங்களையும் பெறுவதற்கும் ஜனநாயக ஆட்சி, வாக்களிப்பு தலைமைத்துவப் பண்புகளை வளர்க்கவும், கல்வி அமைச்சு பாடசாலை அமைப்பில் மாணவர் பாராளுமன்றம் அறிமுகம் செய்துள்ளது. இத்திட்டத்தின் கீழ் எமது பாடசாலையிலும் மாணவர் பாராளுமன்றம் அமைக்கப்பட்டு அமைச்சுக்களினூடாக செயற்றிட்டங்களும் (வலயப் பாராளுமன்ற செயற்றிட்டங்களும்) நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

## இரண்டாம் மொழி சிங்களம்

இரண்டாம் மொழி சிங்கள அமுலாக்கல் திட்டத்திற்கு அமைவாக ஆரம்பப்பிரிவு, இரண்டாம் நிலை பிரிவுகளிற்கு சிங்கள ஆசிரியர் திருமதி. நிஷாந்தினி பிரியதர்ஷினி தொண்டர்ஆசிரியராக நியமிக்கப்பட்டு கற்பித்தல் செயற்பாடுகள் நடைபெற்று வருகின்றது.

எமது பாடசாலை மாணவர்கள் சிங்களமொழி போட்டிகளிலும் பங்குபற்றியுள்ளனர். மும்மொழி வேலைத்திட்டத்திற்கமைய மூன்று மொழிகளிலும் காலைக்கூட்டம் நடைபெற்று வருகின்றது.

## ஆசிரியர் குழாம்

மாணவர்களின் சிந்தனைத்திறன், தர்க்கிக்கும் ஆற்றல், மனஎழுச்சிவிருத்தி என்பவற்றிற்காக உழைத்துக் கொண்டிருக்கும் எமது ஆசிரியர் குழாத்தில் நிரந்தர ஆசிரியர்கள் 20 பேர் உள்ளனர். தொண்டர்ஆசிரியர்களாக திருமதி.இ.கணேசலிங்கம் ஆசிரியரும், திருமதி. நிஷாந்தினி பிரியதர்ஷினி ஆசிரியரும் கடமையாற்றுகின்றனர். திரு. அ.லோகேஸ்வரன், திரு.ச.பரமேஸ்வரன், செல்வி.ந.யோகேஸ்வரி ஆகிய மூன்று கல்விசாரா ஊழியர்களும் கடமையாற்றி வருகின்றனர். இவர்களது வாழ்க்கைச் செழிப்பிற்கும் எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

## ஆசிரியர் கழகம்

எமது வித்தியாலயத்தில் கடமையாற்றும் ஆசிரியர்களிடையே சுமூகமான உறவுகளை ஏற்படுத்தி அதன் ஊடாக வித்தியாலயச் செயற்பாடுகளை மேன்மைப்படுத்தும் நோக்குடன் ஆசிரியர் கழகம் செயற்பட்டு வருகின்றது. இதற்குத் தலைவராக திரு.கா.திருப்பதி ஆசிரியர் அவர்களும் செயலாளராக திருமதி.ஜீ.மகேந்திரன் அவர்களும் செயற்பட்டு வரும் அதேவேளை பொருளாளராக திருமதி.தெ.கணேசலிங்கம் அவர்களும் சிறப்பாகச் செயலாற்றி வருகின்றனர்.

- புதிதாக இணைந்து கொண்டோர்

*ஆசிரியர்கள்

1. திருமதி.வி.சுஜீவகுமார்
2. திருமதி.க.சிவநாதன்
3. திருமதி.சோ.றொபின்சன்
4. திருமதி.ஜெ.மோகநாதன்
5. செல்வி.ந.நமசிவாயம்
6. திரு.ந.சுரேஸ்குமார்

➢ இடமாற்றம் பெற்றுச் சென்றோர்

* ஆசிரியர்கள்

1. திருமதி.கு.இராஜேந்திரன்
2. திருமதி.சி.ஏகாந்தநாதன்
3. திருமதி.சு.ரங்கநாதன்
4. திருமதி.ப.ஹரிசாந்த்
5. திரு.அ.மோகனகாந்
6. செல்வி.ச.தவபாலச்சந்திரன்

## மன்றங்கள், கழகங்கள்

கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளின் ஆரோக்கியத்திற்குக் குழுச் செயற்பாடுகள் சிறந்ததென்பது நவீனகல்விச்சிந்தனை, குழுச்செயற்பாடுகளின் ஆரோக்கிய இயக்கத்திற்கு மன்றங்கள் வலுச்சேர்க்கின்றன. அந்த வகையில் ஒவ்வொரு புதன்கிழமையும் ஒரு பாடவேளை மன்றச் செயற்பாடுகளுக்காக ஒதுக்கப்பட்டு சிறப்பாக மன்றச்செயற்பாடுகள் திருமதி.ஜெ.கேதீஸ்வரன் ஆசிரியரின் ஒழுங்குபடுத்தலின் கீழ் நடைபெற்று வருகின்றன. எமது பாடசாலையில் செயற்படும் மன்றங்களினதும் அவற்றின் பொறுப்பாசிரியரினதும் மாணவர்களினது பதவிநிலை பற்றிய விபரங்களை கீழ்வரும் அட்டவணை காட்டுகிறது.

| மன்றம் | பொறுப்பாசிரியர் | தலைவர் | செயலாளர் |
|---|---|---|---|
| இந்துமாமன்றம் | திருமதி.ம.தனவீரசிங்கம் | பி.சரசிகன் | பூ.யோகராசா |
| கணித விஞ்ஞான மன்றம் | திரு.சா.கமலமூர்த்தி | சி.ரகுவரன் | த.குருபரன் |
| தமிழ் மன்றம் | திரு கா.திருப்பதி | த.குருபரன் | ஜெ.சதுர்சனா |
| ஆங்கில மன்றம் | திரு.பா.மயூரதன் | ஸ்ரீ.பத்மஸ்ரீ | ச.அனோஜிகா |
| வணிக மன்றம் | திரு.சு.கமலதாசன் | பே.விதுர்சன் | சி.ரகுவரன் |
| சுகாதாரக்கழகம் | திரு.ச.உ_தயணன் | ந.துர்க்கா | சி.அனோஜிகா |
| சமூக விஞ்ஞான மன்றம் | திருமதி.தெ.கணேசலிங்கம் | பே.விதுர்சன் | சி.ரகுவரன் |
| கவின்கலைமன்றம் | திருமதி.ச.வேல்முருகன் | த.கஜபாலினி | ஸ்ரீ.பத்மஸ்ரீ |
| சாரணர் அமைப்பு | திரு.ச.உ_தயணன் | த.குருபரன் | கௌ.சஜீபன் |
| ஆரம்பக்கல்வி மாணவர் மன்றம் | திருமதி.ஜீ.மகேந்திரன் | இ.சுபிராஜ் | உ_.கிருத்திகா |
| சிறுவர் பாதுகாப்புக் குழு | திரு.பா.மயூரதன் | சி.ரகுவரன் | கே.தர்மிகா |
| சுற்றாடல் கழகம் | திருமதி.ஜெ.கேதீஸ்வரன் | கி.தனுசன் | த.கயல்விழி |

## பாடசாலையும் சமூகமும்

ஒரு பாடசாலையின் வளர்ச்சியானது அப்பாடசாலை அமைந்துள்ள சமூகத்துடன் நல்லுறவை வளர்ப்பதிலேயே தங்கியுள்ளது. பாடசாலையானது தன்னைச் சுற்றியுள்ள பிள்ளைகளுக்கு காலத்திற்குகந்த பொருத்தமான கல்வியை வழங்கி ஒழுக்கமுடைய, வளமான நற்பிரசையாக வளர்ப்பது பாடசாலையின் கடமையாகும். பின் வளமான மாணவர்களிடமிருந்து பாடசாலை பல்வேறு உதவிகளைப் பெற்று தன்னை வளப்படுத்த வேண்டும் என்ற கல்விச் சிந்தனையாளர்களின் கருத்துப்படி எமது பாடசாலையும் தனது சமூகத்திலிருந்து பல்வேறு வளங்களைப் பெற்று சிறப்படைந்து வருகிறது. பாடசாலையின் பல்வேறு அபிவிருத்தி வேலைகளை எமது பழைய மாணவர்கள் நிறைவு செய்து தந்திருக்கிறார்கள்.

பாடசாலையின் இரண்டாம் நிலைப்பிரிவின் தெற்குப்பக்க மற்றும் வடக்குப்புற புதிய கட்டடத்திற்கும் மதிலுக்குமிடையிலான இடைவெளியை ரூபா 18000.00 மதிப்பில் எமது பாடசாலையின் பழைய மாணவனும் தொழிலதிபருமாகிய திரு.க.பரமானந்தராசா அவர்களால் அமைத்துத் தரப்பட்டது.

பாடசாலையின் அபிவிருத்தி வேலைகளுக்காக ஜெ.யோகராசா (கனடா) ரூபா 30,000.00 ஐயும், ப.சுகுமார் ரூபா 15,000.00 ஐயும் பமலச்சி விஜயகுமார் ரூபா 10,000.00 ஐயும், த.சுரேஸ் (அவுஸ்ரேலியா) ரூபா 25,000.00 ஐயும் அன்பளிப்புச் செய்துள்ளார்கள்.

பாடசாலையின் பழைய மாணவன் திரு.ச.கவிகரன் பாடசாலை வைபவங்களின் போது பாடசாலையை பிரதிபலிக்கும் கொடியை பறக்கவிடுவதற்கான வைப்புக்களை 18000.00 ரூபா செலவில் கொள்வனவு செய்து அன்பளிப்புச் செய்து தந்திருந்தார்.

திரு.திருமதி சந்திரசேகரம் ஞாபகார்த்தமாக அவர்களது புதல்வர்கள் ரூபா 47,000.00 பெறுமதியான அலுவலக மேசை, கதிரை, கணினி மேசை என்பவற்றை அன்பளிப்புச் செய்துள்ளனர்.

கோப்பாய் மாதர் சங்கம் இவ்வாண்டும் எமது பாடசாலையிலிருந்து தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றி 70 புள்ளிகளுக்கு மேல் பெற்றோருக்கான சிறப்புப் பரிசுகளை வழங்கியுள்ளார்கள்.

இராதம்பு, கோப்பாய் வடக்கைச் சேர்ந்த ஆறுமுகம் குடும்பம் ரூபா 10,000.00 பெறுமதியான புத்தகப்பைகளை அன்பளிப்புச் செய்துள்ளார்கள்.

இளைப்பாறிய ஆசிரியர் அமரர் க.மார்க்கண்டு அவர்களின் ஞாபகார்த்தமாக அவரிடம் கல்வி பயின்ற புலம்பெயர் தேசத்திலுள்ள மாணவர்கள் தொடர்ந்தும் மூந்து வருடங்களாக மார்கழி திருவாதிரை நாளில் எமது பாடசாலையைச் சேர்ந்த வறுமைக்கோட்டிற்குட்பட்ட 38 மாணவர்களுக்கு தலா ரூபா 2000/= வீதம் கற்றல் ஊக்குவிப்பு நிதி வழங்கி வருகிறார்கள். இவ்வருடமும் தொடரும் என உறுதியளித்துள்ளார்கள்.

கோப்பாய் வடக்கைச் சேர்ந்த திரு.நல்லதம்பி கனகலிங்கம் அவர்கள் ரூபா 8000.00 பெறுமதியான மேசையின் முகப்புத்திரைச் சேலையை அன்பளிப்புச் செய்து தந்துள்ளார்.

பாடசாலை அபிவிருத்திச்சங்கம், பாடசாலை அபிவிருத்திக்குழு, பழைய மாணவர் சங்கம் போன்றவற்றினூடாக உள்ளீர்க்கப்பட்டவர்களது செயற்பாடுகள் எமது பாடசாலை வளர்ச்சியில் புதியதொரு உந்து சக்தியை எமக்கு வழங்கியுள்ளது. குறிப்பாக வருடம் தோறும் ஆசிரியர்தின விழாவை மிகவும் சிறப்பாக பழைய மாணவர்கள் பொறுப்பேற்று நிகழ்த்தி வருகின்றமையும் பௌதீக வளத்தேவைகளைப் பூர்த்தி செய்து தருகின்றமையும் பாராட்டுதற்குரியனவாகும்.

## எதிர்கால இலக்கு

- தேசிய பரீட்சைகளான தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சை, க.பொ.த சாதாரணதரப் பரீட்சை போன்றவற்றில் சித்திவீதத்தை உயர்த்தி யாழ் மாவட்டத்தில் முதல்தரப் பாடசாலையாக விளங்கச் செய்தல்.
- இணைப்பாடவிதானச் செயற்பாடுகளில் கூடிய சிரத்தை எடுத்து விளையாட்டுப் போட்டி, தமிழ்த்தினப் போட்டி, ஆங்கிலதினப் போட்டிகளில் எமது மாணவர்களை மாகாணமட்டம் வரை பங்கு பெறச் செய்தல்
- மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்காக எமது பாடசாலை சாதனைகளை, எமது பாடசாலை ஊட்டற்பிரதேச மக்களுக்குத் தெரியப்படுத்தும் விழிப்புணர்வுச் செயற்றிட்டங்களை நடாத்தி மாணவர் எண்ணிக்கையை அதிகரித்துக்கொள்ளல்.

## பாடசாலைத் தேவைகள்

- இடைநிலைப் பிரிவின் தெற்குப் பக்கமாக இடிந்து விழும் நிலையிலுள்ள கட்டிடத் தொகுதியை இடித்து அகற்றி $60^{1} \times 25^{1}$ அளவு கொண்ட மாடிக்கட்டிடம் ஒன்று அமைத்தல்.
- விளையாட்டு மைதானத்தைச் சுற்றிச் சுற்றுமதில் அமைத்தல்.
- பாடசாலையின் கவர்ச்சியை மேலும் அதிகரிக்கும் வகையில் பிரதான வாயிலின் முகப்பு அமைத்தல்.
- வகுப்பறைத் தளபாடங்கள் பழைமை வாய்ந்தவையாகக் காணப்படுவதால் மாணவர்களுக்கான 100 மேசை, கதிரைகள்.

## பரிசளிப்பு விழா நிலையான வைப்பு

| | |
|---|---|
| மக்கள் வங்கி (நிலையான வைப்பு) | ரூபா 519, 018.20 |
| தேசிய சேமிப்பு வங்கி (நிலையான வைப்பு) | ரூபா 60,000.00 |

## பரிசளிப்பு விழா நிரந்தர வைப்பிற்குப் பங்களிப்புச் செய்தோர்

| | | | |
|---|---|---|---|
| 01 | திரு. பொ. சதானந்தம் | 16 | திருமதி. நி.இராஜேஸ்வரி |
| 02 | திரு. சி. துரைராசா | 17 | திருமதி. வி. பமிலச்சி |
| 03 | திரு. க. பரமானந்தராசா | 18 | குருபிறின்டேர்ஸ் |
| 04 | திரு. செ. தம்பிராசா | 19 | திருமதி.ம.சுப்பிரமணியம் |
| 05 | திரு. சீ. க. சுப்பிரமணியம் | 20 | திரு. தி. பிரதீபன் |
| 06 | திரு. இ. சுப்பையா | 21 | திருமதி. க. கணேசமூர்த்தி |
| 07 | திரு. க. மார்க்கண்டு | 22 | திரு. த. லோகேஸ்வரன் |
| 08 | திரு. மு. பத்மநாதன் | 23 | திரு. இ. நிசாகரன் |
| 09 | திருமதி. இ. கவிதா | 24 | திருமதி. ப. சாந்தராணி |
| 10 | திரு.கு.ஜெகதீஸ்வரன் | 25 | திரு. கா. திருப்பதி |
| 11 | திருமதி. சு. பரமேஸ்வரி | 26 | திருமதி. ம. கைலைமகான் |
| 12 | திரு. செ. தர்மகுமார் | 27 | திருமதி. ச. காயத்திரி |
| 13 | திரு. வ. செல்வசற்குருநாதன் | 28 | திரு. ச. நவரட்ணம் |
| 14 | திருமதி. பு. கணேஸ் | 29 | திருமதி.ம.ஸ்ரீகாந்தன் |
| 15 | திரு. செ. சற்குணநாதன் | | |

## நன்றியுரை

எமது பாடசாலையின் இன்றைய புனிதமான இந்நிகழ்விற்கு மதிப்பளித்து எமது அன்பான வேண்டுகோளை ஏற்று மிகுந்த வேலைச்சுமைகளிற்கு மத்தியில் தன் அலுவலகப்பணிகளையும் சொந்தப் பணிகளையும் எமக்காக ஒதுக்கி வைத்து விழாவிற்கு வருகை தந்து சிறப்பித்துக் கொண்டிருக்கும் பிரதம விருந்தினர் அவர்களுக்கு பாடசாலைச் சமூகத்தின் சார்பில் நன்றிகள் என்றும் உரித்தாகுக.

எமது வேண்டுகோளிற்கு மதிப்பளித்து பல்வேறு வேலைப்பளுக்களின் மத்தியிலும் எமது பாடசாலை மீது கொண்டிருக்கும் ஈடுபாடு காரணமாக வருகை தந்து சிறப்பித்துக் கொண்டிருக்கும் சிறப்பு விருந்தினர்கள், கௌரவ விருந்தினர்கள், ஆசியுரை வழங்கிய பிரதம குருக்கள், பாடசாலைத் தேவைகள் அறிந்து உதவிகள் நல்கிடும் கல்வித்திணைக்கள அலுவலர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

பாடசாலைச் செயற்பாடுகளில் என்றும் என்னோடு பக்கபலமாக நின்று செயற்பட்டு வரும் பிரதிஅதிபர், முகாமைத்துவக்குழுவினர், மேற்பார்வையாளர்கள், ஆசிரியர்கள், கல்விசாராஉத்தியோகத்தர்கள், மாணவ முதல்வர்கள், மாணவர்கள் அனைவருக்கும் எனது உளமார்ந்த நன்றிகள்.

பாடசாலையின் தேவை அறிந்து சேவைகள் நல்கிடும் பழைய மாணவர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர், பாடசாலை அபிவிருத்திக்குழு அங்கத்தவர்கள், நலன் விரும்பிகள், அரசசார்பற்ற நிறுவன உத்தியோகத்தர்கள், அயற்பாடசாலை அதிபர்கள், இவ்விழா சிறப்பாக நடைபெற நிதியுதவி பொருளுதவி வழங்கிய அனைவருக்கும் இதயபூர்வமான நன்றிகள்.

பரிசு நாள் அறிக்கையைக் கணினியில் பொறித்துத் தந்த செல்வி.அ.வினுஷா அவர்களுக்கும் அதனை புத்தக வடிவில் அழகுற அமைத்துத் தந்த தரங்கி பிறின்டேர்ஸ் நிறுவனத்தினருக்கும் நன்றிகளைத் தெரிவிப்பதோடு இந்நிகழ்விற்கு ஒலி அமைப்புச் சேவையை வழங்கிக் கொண்டிருக்கும் லக்சி சவுண்ட சேர்விஸ் உரிமையாளருக்கும், அதற்கான வசதியை ஏற்படுத்தித்தந்த பழைய மாணவரான சரவணபவன் கவிகரன் (JP) அவர்களுக்கும் ஒளி அமைப்புச் சேவையை வழங்கிக் கொண்டிருக்கும் இ.நிரஞ்சன் அவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதோடு பாடசாலையின் உயர்விற்கு உதவும் அனைத்து உள்ளங்களிற்கும் நல்லாசிகள் கிடைக்க வேண்டுமென சித்திரவேலாயுத சுவாமிகளைப் பிரார்த்தித்து அறிக்கையை நிறைவு செய்கின்றேன்

## பரிசு பெறும் மாணவர் விபரம்

### தரம் 01 (2017இல்)

1. உ.மஸ்மிலன்
2. த.அஜய்
3. சி.பவிசன்
4. வ.தனோஜன்
5. ஜெ.துவாரகேஸ்
6. ச.சங்கவி
7. சி.டிலக்ஷா
8. சி.அபிசாலினி
9. ர.யதுசாழினி
10. ச.யனுஷ்கா
11. க.டிகானி
12. ப.பவித்திரா
13. க.பபிஷனா

| இல | பரிசில் பெறுவோர் பெயர் | பாடம் | இடம் |
|---|---|---|---|
| | | **தரம் 01 (2016)** | |
| 01 | ஜெ.அனுதீபா | சமயம், கணிதம் | 1ம் இடம் |
| | | சுற்றாடல் | 3ம் இடம் |
| 02 | ப.யோதினி | தமிழ், சுற்றாடல் | 1ம் இடம் |
| | | சமயம், கணிதம் | 2ம் இடம் |
| 03 | பு.கனிஷா | சுற்றாடல், தமிழ் | 2ம் இடம் |
| | | கணிதம் | 3ம் இடம் |
| 04 | வா.அர்ஷபன் | சமயம் | 3ம் இடம் |
| 05 | த.புவிசாளினி | தமிழ் | 3ம் இடம் |

| | | | |
|---|---|---|---|
| | | **தரம் 02 (2016)** | |
| 01 | க.அபிசாலினி | தமிழ், கணிதம், சுற்றாடல், சமயம் | 1ம் இடம் |
| 02 | ந.ஹிசானிகா | சுற்றாடல், சமயம் | 2ம் இடம் |
| | | தமிழ் | 3ம் இடம் |
| 03 | யோ.தனுராஜ் | தமிழ் | 2ம் இடம் |
| | | சமயம், கணிதம், சுற்றாடல் | 3ம் இடம் |
| 04 | சி.விதுணன் | கணிதம் | 2ம் இடம் |

| தரம் 03 (2016) | | | |
|---|---|---|---|
| 01 | கி.கிரிவர்த்தனி | தமிழ், சுற்றாடல், சமயம், கணிதம், ஆங்கிலம், | 1ம் இடம் |
| 02 | சி.நிருஷிகா | தமிழ், சமயம், ஆங்கிலம் | 2ம் இடம் |
| 03 | ப.ரினோஜ் | தமிழ், சுற்றாடல் | 3ம் இடம் |
| 04 | தி.புகழரசன் | கணிதம், சுற்றாடல், | 2ம் இடம் |
| 05 | க.சலோமி | கிறிஸ்தவம் | 1ம் இடம் |
| 06 | ம.கவிசன் | கணிதம் | 3ஆம் இடம் |
| 07 | சோ.பகீர்த்தனன் | ஆங்கிலம் | 3ஆம் இடம் |
| 08 | சு.துளசிகா | சமயம், சுற்றாடல் | 3ஆம் இடம் |
| 09 | ஐ.கஸ்மினி | பொதுத்திறமை | |
| 10 | ச.அகலினியன் | பொதுத்திறமை | |

| தரம் 04 (2016) | | | |
|---|---|---|---|
| 01 | தெ.அரிசாந் | தமிழ், சமயம், சுற்றாடல் | 1ம் இடம் |
| | | கணிதம், ஆங்கிலம் | 3ம் இடம் |
| 02 | இ.சுபிராஜ் | ஆங்கிலம் | 1ம் இடம் |
| | | தமிழ், சமயம், கணிதம் | 2ம் இடம் |
| | | சுற்றாடல் | 3ம் இடம் |
| 03 | இ.தர்மிகன் | கணிதம் | 1ம் இடம் |
| | | சுற்றாடல், ஆங்கிலம் | 2ம் இடம் |
| | | சமயம் | 3ம் இடம் |
| 04 | உ..கிரித்திகா | தமிழ் | 3ம் இடம் |
| 05 | ச.பகீரதன் | பொதுத்திறமை | |

| தரம் 05 (2016) | | | |
|---|---|---|---|
| 01 | ச.அபிநயா | சமயம், தமிழ், கணிதம், ஆங்கிலம் | 1ம் இடம் |
| | | சுற்றாடல் | 2ம் இடம் |
| 02 | அ.பிரவீனா | சுற்றாடல் | 1ம் இடம் |
| | | சமயம், கணிதம், தமிழ் | 2ம் இடம் |
| | | ஆங்கிலம் | 3ம் இடம் |
| 03 | த.கனியா | ஆங்கிலம் | 2ம் இடம் |
| | | சுற்றாடல் | 3ம் இடம் |
| 04 | ஸ்ரீ.நிரோஜன் | கணிதம் | 3ம் இடம் |
| 05 | ரா.தேனுஜன் | தமிழ் | 3ம் இடம் |
| 06 | ச.சகீரன் | சமயம் | 3ம் இடம் |
| 07 | க.நியோமி | கிறிஸ்தவம் | 1ஆம் இடம் |
| 08 | க.கேதுசன் | கிறிஸ்தவம் | 2ஆம் இடம் |
| 09 | ம.டனுசியா | பொதுத்திறமை | |
| 10 | ந.நேருஜன் | பொதுத்திறமை | |

| தரம் 06 (2016) | | | |
|---|---|---|---|
| 01 | த.கயல்விழி | ஆங்கிலம், புவியியல், குடியுரிமை, சங்கீதம், சுகாதாரம், செய்.தொ, | 1ம் இடம் |
| | | சமயம், தமிழ் | 2ம் இடம் |
| | | கணிதம் | 3ம் இடம் |
| 02 | க.பவித்திரன் | தமிழ், கணிதம், | 1ம் இடம் |
| | | ஆங்கிலம், குடியுரிமை, சுகாதாரம் | 2ம் இடம் |
| | | சமயம், விஞ்ஞானம், புவியியல், சங்கீதம், செய்.தொ | 3ம் இடம் |
| 03 | கி.தனுசன் | சமயம், விஞ்ஞானம் | 1ம் இடம் |
| | | சங்கீதம் | 2ம் இடம் |
| | | சுகாதாரம், ஆங்கிலம் | 3ம் இடம் |
| 04 | செ.சுலக்சன் | விஞ்ஞானம், புவியியல், செய்.தொ | 2ம் இடம் |
| | | குடியுரிமை | 3ம் இடம் |
| 05 | ஆ.ரதுசனா | நடனம் | 1ம் இடம் |
| | | கணிதம் | 2ம் இடம் |
| 06 | பு.மதுஷா | சித்திரம் | 1ம் இடம் |
| 07 | பா.நிருஷிகா | நடனம் | 2ம் இடம் |
| 08 | சி.சிவகீர்த்தனா | சித்திரம் | 2ம் இடம் |
| 09 | த.கர்சினி | தமிழ் | 3ம் இடம் |
| 10 | த.யதுசா | நடனம் | 3ம் இடம் |

| தரம் 07 (2016) | | | |
|---|---|---|---|
| 01 | க.நர்மதன் | சமயம், தமிழ், ஆங்கிலம், விஞ்ஞானம், வரலாறு, புவியியல், குடியுரிமை, சுகாதாரம், செ.தொ | 1ம் இடம் |
| | | சித்திரம், கணிதம், | 2ம் இடம் |
| 02 | க.விதுஷா | R.C, நடனம் | 1ம் இடம் |
| | | விஞ்ஞானம், குடியுரிமை, செ.தொ | 2ம் இடம் |
| | | ஆங்கிலம், தமிழ், வரலாறு, சுகாதாரம், புவியியல் | 3ம் இடம் |
| 03 | உ.நீர்த்திகா | சங்கீதம் | 1ம் இடம் |
| | | சமயம், தமிழ், ஆங்கிலம், வரலாறு, குடியுரிமை, சுகாதாரம், புவியியல் | 2ம் இடம் |
| | | விஞ்ஞானம், கணிதம், செ.தொ, | 3ம் இடம் |
| 04 | கௌ.சஸ்மியன் | கணிதம், | 1ம் இடம் |
| 05 | ச.கனிஸ்ரா | சித்திரம் | 1ம் இடம் |
| 06 | பி.சாம்பவி | சங்கீதம் | 2ம் இடம் |
| 07 | அ.பேரரசி | சங்கீதம் | 3ம் இடம் |
| 08 | சி.கயலக்சன் | சமயம் | 3ம் இடம் |
| 09 | ஸ்ரீ.திலக்சன் | சித்திரம் | 3ம் இடம் |

| தரம் 08 (2016) | | | |
|---|---|---|---|
| 01 | ந.சுபானுஜன் | தமிழ், கணிதம், விஞ்ஞானம், குடிரிமை, நடனம், | 1ம் இடம் |
| | | ஆங்கிலம் | 2ம் இடம் |
| | | சமயம், புவியியல் | 3ம் இடம் |
| 02 | கி.தரணியா | தமிழ், ஆங்கிலம், சங்கீதம், சுகாதாரம் | 1ம் இடம் |
| | | சமயம், செய்.தொ | 2ம் இடம் |
| | | வரலாறு, சங்கீதம் | 3ம் இடம் |
| 03 | ஜெ.ஜசிந்தன் | சமயம், செய்.தொ | 1ம் இடம் |
| | | கணிதம், விஞ்ஞானம், சுகாதாரம் | 2ம் இடம் |
| | | தமிழ், குடியுரிமை | 3ம் இடம் |
| 04 | யோ.சாகித்தியன் | வரலாறு | 1ம் இடம் |
| | | குடியுரிமை, சித்திரம் | 2ம் இடம் |
| | | விஞ்ஞானம், செய்தொ | 3ம் இடம் |
| 05 | வி.அனோஜன் | புவியியல் | 1ம் இடம் |
| | | வரலாறு | 2ம் இடம் |
| | | சுகாதாரம் | 3ம் இடம் |
| 06 | வா.கயலக்சன் | புவியியல், நடனம் | 2ம் இடம் |
| 07 | கே.நவநீதன் | வரலாறு | 2ம் இடம் |
| 08 | ச.அக்சயா | கணிதம், ஆங்கிலம், சங்கீதம் | 3ம் இடம் |
| 09 | ஸ்ரீ.கோகுலஸ்ரீ | சங்கீதம் | 2ம் இடம் |
| 10 | அ.சகாயரூபி | R.C | 1ம் இடம் |
| 11 | ச.டிலக்சன் | சித்திரம் | 1ம் இடம் |
| 12 | இ.சரண்யா | நடனம் | 3ம் இடம் |

| தரம் 09 (2016) | | | |
|---|---|---|---|
| 1 | கௌ.சஜீவன் | தமிழ், சைவநெறி, கணிதம், செய்.தொ சங்கீதம், வரலாறு, குடியுரிமை | 1ம் இடம் |
| | | ஆங்கிலம், சுகாதாரம் | 2ம் இடம் |
| | | விஞ்ஞானம், புவியியல் | 3ம் இடம் |
| 2 | சி.அனோஜிகா | புவியியல், ஆங்கிலம் | 1ம் இடம் |
| | | சைவநெறி, தமிழ், நடனம் | 2ம் இடம் |
| | | குடியுரிமை | 3ம் இடம் |
| 3 | பி.சரசிகன் | விஞ்ஞானம், சித்திரம், சுகாதாரம் | 1ம் இடம் |
| | | கணிதம், வரலாறு | 2ம் இடம் |
| | | செய்.தொ | 3ம் இடம் |
| 4 | ச.விஜிதரன் | விஞ்ஞானம் | 2ம் இடம் |
| | | கணிதம் | 3ம் இடம் |
| 5 | அ.பிரவீன் | புவியியல், சங்கீதம் | 2ம் இடம் |
| | | சைவநெறி, வரலாறு | 3ம் இடம் |
| 6 | கே.தர்மிகா | ஆங்கிலம், நடனம் | 3ம் இடம் |
| 7 | இ.கஜேந்தினி | நடனம் | 1ம் இடம் |
| | | செய்.தொ | 2ம் இடம் |
| | | தமிழ் | 3ம் இடம் |
| 8 | ப.கவிசனா | குடியுரிமை | 2ம் இடம் |
| | | சுகாதாரம் | 3ம் இடம் |
| 9 | ம.பானுசா | சங்கீதம் | 3ம் இடம் |
| 10 | சி.வேணுஜன் | சித்திரம் | 2ம் இடம் |
| 11 | பி.டினுசன் | சித்திரம் | 3ம் இடம் |

| தரம் 10 (2016) | | | |
|---|---|---|---|
| 1 | சி.ரகுவரன் | கணிதம், விஞ்ஞானம், சித்திரம், வர்த்தகம், ICT | 1ம் இடம் |
| | | ஆங்கிலம் | 2ம் இடம் |
| 2 | த.கஜபாலினி | சமயம், தமிழ்மொழி, ஆங்கிலம் | 1ம் இடம் |
| | | வரலாறு | 2ம் இடம் |
| | | சங்கீதம் | 3ம் இடம் |
| 3 | ஜெ.சதுர்சனா | தமிழ், கணிதம், வர்த்தகம், சங்கீதம் | 2ம் இடம் |
| | | சமயம், ICT | 3ம் இடம் |
| 4 | ஸ்ரீ.பத்மஸ்ரீ | வரலாறு | 1ம் இடம் |
| | | நடனம், சமயம் | 2ம் இடம் |
| | | தமிழ், ஆங்கிலம் | 3ம் இடம் |
| 5 | க.றொக்சன் | கிறிஸ்தவம், குடியுரிமை, விவசாயம் | 1ம் இடம் |
| | | சித்திரம் | 2ம் இடம் |
| | | வரலாறு | 3ம் இடம் |
| 6 | த.குருபரன் | விஞ்ஞானம் | 2ம் இடம் |
| | | கணிதம் | 3ம் இடம் |

| | | | |
|---|---|---|---|
| 7 | சி.சிம்சோன் | கிறிஸ்தவம், விவசாயம் | 2ம் இடம் |
| 8 | பே.விதுர்சன் | ICT | 2ம் இடம் |
| | | விஞ்ஞானம், வர்த்தகம், | 3ம் இடம் |
| 9 | சு.திலக்சிகா | நடனம் | 1ம் இடம் |
| | | சுகாதாரம் | 2ம் இடம் |
| 10 | க.தேனுகா | சங்கீதம், சுகாதாரம் | 1ம் இடம் |
| | | குடியுரிமை | 3ம் இடம் |
| 11 | கா.நாராயணி | நடனம், சுகாதாரம் | 3ம் இடம் |
| 12 | யோ.கிருயாளினி | சித்திரம் | 3ம் இடம் |
| 13 | பூ.யோகராசா | விவசாயம் | 3ம் இடம் |
| 14 | வி.சுபஸ்ரிகன் | குடியுரிமை | 2ம் இடம் |
| 15 | ச.நிதுஷா | கிறிஸ்தவம் | 3ம் இடம் |

| தரம் 11 (2016) | | | |
|---|---|---|---|
| 1 | இ.தரணியா | தமிழ், சமயம், கணிதம், ஆங்கிலம், விஞ்ஞானம், வரலாறு, வர்த்தகம், ICT | 1ம் இடம் |
| | | சங்கீதம் | 2ம் இடம் |
| 2 | சி.யனுசியா | நடனம், சுகாதாரம் | 1ம் இடம் |
| | | சமயம், தமிழ், வர்த்தகம், வரலாறு | 2ம் இடம் |
| | | கணிதம், விஞ்ஞானம் | 3ம் இடம் |
| 3 | க. விதுரா | சமயம், ஆங்கிலம், தமி.இலக், ICT | 3ம் இடம் |
| 4 | ச. முகுந்தினி | சங்கீதம் | 1ம் இடம் |
| | | கணிதம், விஞ்ஞானம், சுகாதாரம் | 2ம் இடம் |
| | | தமிழ், வரலாறு, வர்த்தகம் | 3ம் இடம் |
| 5 | இ.இராஜஜிதேந்திரன் | சித்திரம் | 1ம் இடம் |
| | | ஆங்கிலம், ICT | 2ம் இடம் |
| 6 | கே.யதுசன் . | விவசாயம் | 1ம் இடம் |
| 7 | வி.இசானிகா | குடியுரிமை | 1ம் இடம் |
| | | சுகாதாரம், சங்கீதம் | 3ம் இடம் |
| 8 | ந.தனுசன் | விவசாயம் | 2ம் இடம் |
| 9 | ம.யான்சிகா | குடியுரிமை | 2ம் இடம் |
| 10 | இ.இந்துசா | நடனம் | 2ம் இடம் |
| | | குடியுரிமை | 3ம் இடம் |
| 11 | ம.பவித்திரன் | தமிழ் இலக்கியம் | 1ம் இடம் |
| 12 | ச.அகிலவன் | தமிழ் இலக்கியம் | 2ம் இடம் |
| 13 | ச.சர்மிலன் | சித்திரம் | 2ம் இடம் |
| | | விவசாயம் | 3ம் .டம் |
| 14 | இ.வினோத் | சித்திரம் | 3ம் இடம் |
| 15 | அ.கனிஸ்ரா | நடனம் | 3ம் இடம் |

தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சையில்

70 புள்ளிகளுக்கு மேல் பெற்றோர் விபரம் - 2017

| இல | மாணவர் பெயர் | புள்ளிகள் |
|---|---|---|
| 01 | வ.நிகோதன் | 75 |
| 02 | ச.பகீரதன் | 120 |
| 03 | பி.சுவேந்திரன் | 84 |
| 04 | இ.சுபிராஜ் | 141 |
| 05 | தெ.அரிசாந் | 134 |
| 06 | செ.தனுசன் | 76 |
| 07 | கி.தர்மிகன் | 139 |
| 08 | சு.மிதுசன் | 77 |
| 09 | ப.நேருஜன் | 81 |
| 10 | உ.கிருத்திகா | 139 |
| 11 | அ.சாம்பவி | 97 |
| 12 | ஆ.டர்மிதா | 93 |

பரிசுத்தினத்தை முன்னிட்டு நடாத்தப்பட்ட பேச்சுப் போட்டிகளில்

பரிசு பெறும் மாணவர்கள்

ஆரம்பப்பிரிவு

- கி.கிரிவர்த்தனி - 1ஆம் இடம்
- க.பிருந்தாபன் - 2ஆம் இடம்
- ம.கவிசன் - 3ஆம் இடம்
- உ.கிருத்திகா - 3ஆம் இடம்

இடைநிலைப்பிரிவு

- தமிழ்ப்பேச்சு - செல்வி சி.அனோஜிகா முதலாம் இடம்
- ஆங்கிலப்பேச்சு - செல்வி த. கஜபாலினி முதலாம் இடம்

## க.பொ.த சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேறு – 2016

## விசேட சித்தி (A) பெற்றோர் விபரம்

| இல | மாணவர் பெயர் | பாடங்கள் |
|---|---|---|
| 01 | இ.தரணியா | சமயம், தமிழ், விஞ்ஞானம், கணிதம், வரலாறு, வர்த்தகம், சங்கீதம், |
| 02 | ச.முகுந்தினி | சமயம், விஞ்ஞானம், கணிதம், வரலாறு, வர்த்தகம் சங்கீதம், சுகாதாரம் |
| 03 | இ.இராஜஜிதேந்திரன் | தமிழ், ஆங்கிலம், விஞ்ஞானம், கணிதம், வர்த்தகம், ICT |
| 04 | சி.யனுசியா | சமயம், தமிழ், கணிதம், வரலாறு, வர்த்தகம் சுகாதாரம் |
| 05 | கே.யதுசன் | சமயம், வரலாறு, சங்கீதம், விவசாயம் |
| 06 | க.விதுரா | சமயம், தமிழ், கணிதம், சங்கீதம் |
| 07 | இ.இந்துஜா | சமயம், சுகாதாரம் |
| 08 | பி.இஷானிகா | சமயம், சங்கீதம் |
| 09 | இ.வினோத் | விவசாயம் |
| 10 | ச.அகிலவன் | கணிதம் |
| 11 | ம.பவித்திரன் | தமிழ் |
| 12 | இ.லக்சிகா | சமயம், |
| 13 | ப.கிருஷாளினி | சமயம், |
| 14 | வா.டிலக்சனா. | சமயம் |

## விசேட பரிசு பெறுவோர் - 2017

| போட்டியின் பெயர் | நிகழ்ச்சி | மாணவர் பெயர் | முடிவுகளும் | |
|---|---|---|---|---|
| | | | கோட்டம் | வலயம் |
| தமிழ்மொழித்தினம் | பிரிவு 1 பேச்சு | சு.துளசிகா | 1 | 3 |
| | பிரிவு 2 பாஓதல் | த.கயல்விழி | 1 | 3 |
| | பிரிவு 4 பாஓதல் | கே.தர்மிகா | 2 | |
| | பிரிவு 4 தனிஇசை | ஈ.சிவானுஜா | 3 | |
| | பிரிவு 4 தனிநடனம் | இ.கஜேந்தினி | 3 | |
| | சிறுகதை ஆக்கம் | த.கஜபாலினி | 3 | |
| சிறுவர் சித்திரப் போட்டி | தரம் 2 | ஜெ.அனுதீபா | 3 | |
| சமூக விஞ்ஞானாப் போட்டி | தரம் 11 | த.கஜபாலினி | 1 | |
| | | ஸ்ரீ. பத்மஸ்ரீ | 1 | |
| | | உ.கேதினி | 3 | |
| சைவநெறிப்போட்டி | பிரிவு 1 தோரணம் பின்னுதல் | கி.தனுசன் | 1 | 2 |
| | பிரிவு 2 பேச்சு | சி.அனோஜிகா | 2 | |
| | பிரிவு 3 தோரணம் பின்னுதல் | க.லக்சன் | 3 | |
| | பிரிவு 4 பண்ணிசை (குழு) | 1. பி.சாம்பவி - 8 | 3 | |
| | | 2. ஆ.பேரரசி - 8 | | |
| | | 3. உ.நீர்த்திகா - 8 | | |
| | | 4. கி.தனுசன் - 7 | | |
| | | 5. க.பவித்திரன் - 7 | | |
| | | 6. த.கயல்விழி - 7 | | |
| | | 7. சி.சிவகீர்த்தனா - 7 | | |
| | | 8. த.கர்சினி - 7 | | |
| | பிரிவு 3 புராணபடனம் | சி.அனோஜிகா<br>ஈ.சிவானுஜா | 2 | 2 |
| | பிரிவு 3 கதாப்பிரசங்கம் | த.கஜபாலினி | 1 | |
| சர்வதேச முதியோர் தினம் | பிரிவு 1 கட்டுரை | உ.கிருத்திகா | 2 | |
| | பிரிவு 2 பேச்சு | உ.நீர்த்திகா | 2 | |
| | பிரிவு 2 கவிதை | கேதீஸ் நர்மதன் | 1 | |
| | பிரிவு 3 பேச்சு | சி.அனோஜிகா | 2 | |
| | பிரிவு 3 கவிதை | கி.தரணியா | 2 | |
| ஆங்கில தினம் | தரம் 11 உறுப்பெழுத்து | ஸ்ரீ.பத்மஸ்ரீ | 1 | 3 |
| | உறுப்பெழுத்து | த.கயல்விழி | 3 | |
| | தொடரெழுத்து | ஜெ.சதுர்சனா | 1 | |
| | Recitation (பாடல் இசைத்தல்) | உ.கேதினி | 2 | |
| Science copies nature's secrets (NIFS) நிறுவனம் | சஞ்சிகை ஆக்கம் | பி.சரசிகன் - 9 | | |

# J/KOPAY SARAVANAPAVANANTHA VIDYALAYAM

## TEACHERS STAFF – 2017

**Permanent Staff**

| | | | |
|---|---|---|---|
| 01 | Mr.A.Anantharajah | B.B.A(Hons),Dip.In.Edu,M.Ed | SLPS - 2 |
| 02 | Mr.K.Thiruppathi | B.A,Dip In Edu M.Phil | SLTS - I |
| 03 | Mrs.J.Ketheeswaran | Sp.Trd.Science, B.Ed (Hons) | SLTS - I |
| 04 | Mrs.S.Balasubramaniyam | Primary Trd | SLTS - I |
| 05 | Mrs.J.Mahenthiran | Primary Trd | SLTS - I |
| 06 | Mrs.M.Thanaveerasingam | Hindusiam Trd | SLTS - I |
| 07 | Mrs.T.Ganeshalingam | BA.Dip. In Edu | SLTS - I |
| 08 | Mrs.S.Velmurugan | Dip. In Music, Dip.In Edu | SLTS - I |
| 09 | Mr.S.Kamalathasan | B.Ed, Sp.Trd.Commerce | SLTS - 2 I |
| 10 | Mr.V.Sangarraj | Sp.Trd.Art | SLTS - 2 I |
| 11 | Mrs.S.Kamalamoorthy | Sp.Trd.Maths | SLTS - 2 I |
| 12 | Mrs.V.Kirushnakumar | Primary Trd, B.Ed | SLTS - 2 I |
| 13 | Mr.N.Sureskumar | Agriculture. Trd. | SLTS - 2 I |
| 14 | Mr.P.Majurathan | Eng. Trd. | SLTS - 2 II |
| 15 | Mrs.J.Cyrilthanarajan | Primary Trd,B.A,Dip. In Edu | SLTS - 2 II |
| 16 | Mrs.S.Sujeevakumar | Dip.in Teaching English | SLTS - 2 II |
| 17 | Mrs.J.Mokanathan | Dip. inTeaching | SLTS - 2 II |
| 18 | Miss.N.Namasivajam | Dip inTeaching Social studies | SLTS - 2 II |
| 19 | Mrs.K.Thamilarashan | M.A,Dip. In Edu | SLTS - 2 II |
| 20 | Mrs.S.Robinson | Dip. inTeaching Dance | SLTS - 3 I |
| 21 | Mrs. Gayanee Sivanathan | HND IT | SLTS - 3 I |
| 22 | Mr. S.Uthayanaan | Sp.Trd.Phy.Edu, HNDA | SLTS - 3 II |

**Non Academic Staff**

01. Miss.N.Yogeswary
02. Mr.A.Logeswaran
03. Mr.S.Parameswaran

**Helpers For School Activities**

1. Mrs.R.Kanesalingam 2. Mrs. Nishanthini priyadharshani 3. Miss.A.Vinusha

## பாடசாலைக் கீதம்

இராகம் : ஹம்சத்வனி

தாளம் : ஆதி

பரவியே நாம் துதிப்போம் - கோப்பாய்
சரவணபவானந்த வித்தியாலய மாதாவை
பரவியே நாம் துதிப்போம்
கரமலரேடேந்தி கல்வி கலை ஞானம்
வரமருளி எமக்கு வாழ்வு தரும் வாணியை

(பரவியே.........)

சீலம் நிறைந்த சைவம்செந்தமிழ்ப் பண்பெல்லாம்
பாலர் எமக்கு ஊட்டி பரிந்தன்பாய் தருபவள்
ஞாலம் புகழ்ஞான பண்டிதனார் தந்த
மூலகலைக் கோயில் தானுறை அன்னையை

(பரவியே.........)

தூய தமிழினோடு துலங்கிடும் விஞ்ஞானம்
நயமுடன் கணிதம் ஆங்கிலம் விவசாயம்
தோயும் மனையியலும் திகழுடர் கல்வியோடு
ஆய கலைகள் எல்லாம் அள்ளி அள்ளித் தருபவளே

(பரவியே.........)

அயர்வு இல்லாத எங்கள் அதிபரும் வாழி வாழி
நேயமுடன் கல்வி நல்கும் நல்லாசிரியர் வாழி
உயர்வு உள்ளல் என்னும் உன்னத நெறி வாழி
சரவணபவானந்த வித்தியாலயமும் வாழி

(பரவியே.........)